**தலைப்பு 238 – அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் விடுக்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி ஏடுகளின் பிரகாரம் தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 310,093 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதியானது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நிதிச் சொத்துக்களில் முறைப்படியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஆண்டு இறுதி மீதியை முறையாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். | 2019 சனாதிபதித் தேர்தல் கடமைகளுக்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்காகச் செய்த கொடுப்பனவுகளானது தற்பொழுது தேர்தல்கள் அலுவலகத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வருமானக் குறியீடு மற்றும் வருமான குறியீட்டு விபரம் - 10.02.10.00 சமூக பொறுப்புக்கள் வரி | | |
| 2019 திசெம்பர் 31 வரை மேற்கூறிய வருமானக் கணக்கு தொடர்பாக ரூபா 64,630,999 பணம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் இம்மீதியில் 06 ஆண்டுகளை மிகைத்த ரூபா 63,012,706 மீதி காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் 128(உ) பிரிவின் பிரகாரம் அரசாங்க வருமானத்தை சேகரித்தல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கின்ற கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் திணைக்களத்தை விசாரித்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த நிலுவை வருமானங்களை தாமதமின்றி சேகரித்தல் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்படுகின்றது என்பதற்கு அரசாங்க வருமானங்கள் தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புக்கு கட்டுப்பட்டுள்ளார். | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் 128(உ) பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த நிலுவை வருமானத்தை தாமதமின்றி சேகரித்தல் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்படும் தேவைப்பாடு | சமூக பொறுப்புக்கள் வரியைச் சேகரிக்கின்ற நிறுவனங்களான இலங்கை சுங்கம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பன பொறுப்புக்கு கட்டுப்பட்டுள்ளது எனவும் கணக்கீட்டு உத்தியோகத்தராக இத்திணைக்களம் அரையாண்டு ரீதியான நிலுவை வருமான அறிக்கையை பெற்றுக் கொண்டுள்ளது எனவும் அவ்வாறே அதனை விரைவாக அறவீடு செய்வதற்குத் தேவையான முயற்சிகள் எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தினால் வருமானங்களை மதிப்பீடு செய்யும் போது முறைப்படியாக மீளாய்வு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தலின் அடிப்படையில் வருமான மதிப்பீட்டினைத் தயாரிக்காமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான தொடக்க வருமான மதிப்பீட்டிற்கும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 22 சதவீதத்திலிருந்து 79 சதவீதம் வரையான சாதகமான முரண்கள் மற்றும் 30 சதவீதத்திலிருந்து 325 சதவீதம் வரையான பாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டன. | ஒரு அமைச்சிற்கு அல்லது திணைக்களத்திற்கு விசேடமாக ஒப்படைக்கப்படாத வருமானங்கள் சம்பந்தமாக நேரடி மேற்பார்வையானது திணைக்களத் தினால் நிறைவேற்றப்பட வேண்டியதான தேவைப்பாடு | 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தொடக்க பட்டோலைகள் மற்றும் அவற்றின் உள்ளபடியான நிலவரங்கள், அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தைப் போல கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளிநாட்டுச் சந்தைகளைப் போல் உள்நாட்டுச் சந்தைகளின் நிலவரங்கள், வட்டி விகிதங்களில் மற்றும் நாணயமாற்று விகிதங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களின் தாக்கங்களைப் போல திடீர் இடர்நிலை உருவாகுதல் முதலியவற்றின் மூலம் அரசாங்க வருமானங்களின் அடிப்படையில் உருவாகிய அழுத்தங்களானது எதிர்பார்த்த மட்டத்தில் முரண்கள் ஏற்படுவதற்கு அடிப்படையாக தாக்கமளித்த பிரதான காரணங்களாகும். |
| (இ) | வரி வருமானத்தின் கீழுள்ள மதுபான வரி வருமானத்தில் 1994 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான ரூபா 986,683,292 நிலுவை வருமானத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அல்லது திணைக்களத்தால் அது தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு | மதுவரித் திணைக்களத்தினால் இந்நிலுவை வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தெரிவுப் பரிசோதனையின் போது 12 திணைக்களங்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,682,886,537 திரண்ட நிலுவைப் பணமும் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 815,593,770 நிலுவைப் பணமும் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 938,291,784 நிலுவைப் பணமுமாக ரூபா 5,436,772,091 மொத்த தொகையான நிலுவைப் பணமும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | அரசாங்கத்தின் வரி மற்றும் வரியற்ற வருமானங்களுக்காக இதுவரையுள்ள அனைத்து வருமானக் குறியீடுகள் மற்றும் தொடர்புபட்ட நிலுவை வருமானங்கள் சம்பந்தமாக இதுவரை திணைக்களத்தினால் தேவையான மேலதிக கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுப்பதனை முன்னிட்டு விபரமான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாகவும் இதன் போது விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | இலங்கை விமானப் படைத் திணைக்களத்தினால் 20.03.06.00 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டுக் கடமைகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமெரிக்க டொலர் 1,544,118 தொகையான திரண்ட நிலுவைப் பணமும் 2018 ஆம் ஆண்டிற்காக அமெரிக்க டொலர் 3,228,591 தொகையான நிலுவைப் பணமும் 2019 ஆம் ஆண்டிற்காக அமெரிக்க டொலர் 7,271,434 தொகையான நிலுவைப் பணமும் ஆக அமெரிக்க டொலர் 12,044,143 மொத்த தொகையான நிலுவைப் பணம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | அரசாங்கத்தின் வரி மற்றும் வரியற்ற வருமானங்களுக்காக இதுவரையுள்ள அனைத்து வருமானக் குறியீடுகள் மற்றும் தொடர்புபட்ட நிலுவை வருமானங்கள் சம்பந்தமாக இதுவரை திணைக்களத்தினால் தேவையான மேலதிக கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுப்பதனை முன்னிட்டு விபரமான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாகவும் இதன் போது விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் அதன் II ஆம் பட்டோலையின் (1)(அ) இன் கீழ் காட்டப்பட்டுள்ள வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தமது மாதாந்த அறிக்கையினை அடுத்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதி அல்லது இதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மதுவரி திணைக்களம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளை உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அத்தியாவசியமானதாகும். | 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தமது வருமான செயலாற்றல் அறிக்கையினை அரசாங்கத்தின் நிதிக் கொள்கைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய முறைமை தொடர்பாக விளக்கமாகக் காட்டப்பட்டுள்ளதனால் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் சரியான முறையில் உரிய தகவல்களையும் அறிக்கைகளையும் நிர்ணயிக்கப்பட்டவாறு வழங்குவதற்கு தொடர்ச்சியாக கட்டுப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக நேரடியாக உரிய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பொறுப்புக்கூற வேண்டுமெனவும் இத்திணைக்களம் அனைத்து வருமானத் தலைப்புக்களின் மாதாந்த வருமான செயலாற்றல் தொடர்பான தரவுகளை திறைசேரி அச்சுப் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு அவை மதிப்பீடு செய்வதற்கு உட்படுத்தப்படுவதுடன் இத்தகவல்கள் தேவையான கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்காக பயன்படுத்தப்படும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவில் 2006/2007 ஆம் ஆண்டுகளில் சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச நீதிமன்றத்தில் ஒரு தனியார் கம்பனியின் பிணக்கினைத் தீர்த்து வைப்பது தொடர்பாக செலுத்த வேண்டிய பணமாக ரூபா 1,670,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அந்த நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டினை நடைமுறைச் சாத்தியமாகவும் ஆக்கபூர்வமான தாகவும் தயாரிப்பதற்குத் தேவையான முயற்சிகள் எடுத்தல் அத்தியாவசியமான தாகும். | இதற்காக சர்வதேச நீதிமன்ற தீர்ப்புக்கு இணங்க உரிய கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியிருந்தது எனவும் அதுவரை உடன்படிக்கை செய்து கொள்ளப்படாததனால் அப்பணத்தை செலுத்துவதற்காக முன்வந்திருக்காததனால் கொடுப்பனவிற்காக முன்வரும் வரை அதற்காக வருடாந்தம் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. |

## 3. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியணியில் 07 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அவை அங்கீகரித்த பதவியணியினர்களில் 13 சதவீதமாகும். இவ்வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 04 பதவிகள் காணப்பட்டதுடன் இப்பதவிகள் தொடர்ச்சியாக வெற்றிடமாகக் காணப்படுகின்றமை திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் விடயம் என்பது அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியணியினை முறைப்படியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அத்தியாவசியமான தாகும். | ஒட்டுமொத்த பதவியணியினர் தொடர்பாக தற்பொழுது மதிப்பீடு இடம்பெற்று வருவதனால் அதற்கிணங்க மேலதிக பதவியணியினரின் தேவைப்பாட்டின் அடிப்படையில் உரிய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறுகின்றது என தெரிவிக்கப்பட்டது. |